**து. கண்ணுசாமி**
பட்டயக் கணக்காளர்
கதவு எண் - 9, பாரதி ரோடு, இரண்டாம் தளம்
பிருந்தாவன் கேம்பஸ், கடலூர் - 607 001.
கைப்பேசி : 9443131888
மின்னஞ்சல் : dk@infotaxx.com

07.05.2020

(இந்த சுற்றறிக்கை என் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே)

அன்புள்ள அய்யா/அம்மா

வணக்கம். உபயஷேமம்.

இப்பவும் COVID-19 முழு அடைப்பு காரணமாக கடந்த மார்ச் 2020 3-வது வாரத்திலிருந்து நாங்கள் எங்கள் வீட்டில் இருந்தே அலுவலக பணிகளை செய்து வருகிறோம். தற்சமயம் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள எனது அலுவலகம் சிலமாதங்களுக்கு தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும். மேற்குறிப்பிட்ட முழு அடைப்பு நீக்கப்பட்ட உடன் எங்கள் அலுவலகம் அதன் விலாசத்தில் தொடர்ந்து இயங்கும் தேதி தங்களுக்கு தெரிவிக்கப்படும்.

நாங்கள் வீட்டில் இருந்தே அலுவலகப் பணியை செய்து வருவதால் கீழ்கண்ட எங்கள் அலுவலகம் சம்மந்தப்பட்ட பணிகள் முறையே தணிக்கை, வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி இந்தியன் கம்பெனி சட்டம், eTDS, PAN, TAN மற்ற இதனுடன் சம்மந்தப்பட்ட இதர பல அலுவல்களுக்காக கீழ் கண்ட முறையை தாங்கள் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த பணிகள் தாங்கள் செய்து முடிக்க வேண்டிய சட்டபூர்வமான பணிகள் குறித்த காலத்திற்குள் முடிப்பதற்காக இந்த தற்காலிக முறையே அறிமுகப்படுத்தி இருக்கிறோம். முறைகள் பின்வருமாறு :

1. தாங்கள் எங்களுக்கு வருடா வருடம் அனுப்பும் Form-16, சம்பளம் தவிர்த்த Form-16A, வங்கி கணக்குகள், வங்கி கடன் கணக்குகள், Tally Data, வங்கி வைப்புத் தொகை ரசீது காப்பிகள், கணக்குப் புத்தகங்கள், வவுச்சர்கள், பில்கள், பிரிவு 80-C வருமான வரிச் சட்டத்தின் கீழ் சலுகைப் பெறும் ஆவணங்கள் (LIC ரசீது காப்பிகள், NSC காப்பிகள் மற்றும் பல), e-TDS ரிட்டன்கள் தயார் செய்வதற்கான அனைத்து தகவல்கள் மற்றும் அதற்கான தொகை கட்டிய செலான்கள், வருமான வரி கணக்கிடப்பட்ட ஸ்டேட்மென்டுகள், மெடிக்கிலைம் ரசீதுகள், வீட்டு கடன் வட்டி சா்டிபிகேட், வீட்டு கடன் ஸ்டேட்மென்ட், EMI ஸ்டேட்மென்ட், அட்வான்ஸ் டாக்ஸ் கட்டிய செலான்கள், வருமான வரி கழிவு பெறும் அன்பளிப்புக்கான ரசீதுகள், வருமான வரி கழிவு பெறும் 80-U & 80-DD மருத்துவ சான்றிதழ்கள், பான்கார்டு காப்பி, ஆதார் கார்டு காப்பி தங்கள் போட்டோ (தேவைப்படின்), சீட்டு கட்டிய பாஸ் புத்தகம்,

இந்த வருடத்திற்கான ஐந்தொகை காப்பி மற்றும் இதர பல ஆவணங்கள் ஏதேனும் இருப்பின் வருமான வரி மற்றும் இதர வரி ஸ்டேட்மென்டுகள் மற்றும் ரிட்டன்கள் தயார் செய்து தாக்கல் செய்வதற்காக மேற்படி ஆவணங்களை பேப்பர் ஆவணங்களாக (Hard Copy) அனுப்பாமல் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது வாட்ஸ்அப் மூலமாகவோ மென்மையான நகலாக (Soft copy) அனுப்பி வைக்க கோருகிறோம்.

2. மேற்படி Soft Copy-கள் வருடாந்திர ஆடிட், Income Tax ஆடிட், சரக்கு மற்றும் சேவை வரி ரிட்டன் மற்றும் ஆடிட், வருமான வரி ரிட்டன்கள், வங்கிகளுக்கு தேவைப்படும் இதர சர்டிபிகேட்டுகள் மற்றும் ஸ்டேட்மென்டுகள் தயார் செய்வதற்காக தங்களிடமிருந்து வழக்கமாக பெறப்படும் ஆவணங்களே ஆகும். தங்களுக்கு எந்த உபயோகத்திற்கு எந்தவிதமான ஆவணங்கள், ஸ்டேட்மெண்டுகள், ரிட்டன்கள் தேவையோ அதை நேரடியாக ஆடிட்டரிடமே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதற்கு தேவையான ஆவணங்கள் என்ன என்ன என்பதை தெளிவாக தெரிந்து கொண்டு அவற்றை Scan செய்தோ அல்லது வாட்ஸ்அப் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தவறாமல் அனுப்பவும்.

3. இந்த ஆவணங்கள் சம்மந்தமாக ஆடிட்டர் தவிர வேறு யாரையும் தொடர்பு கொண்டு அவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். மேற்படி என் அலுவலக மேலாளர்கள் அலுவலக பணியில் முழு நேரமும் இருப்பதால் அவர்களை செல் போன் முலமோ அல்லது மின்னஞ்சல் முலமோ தொடர்பு கொள்ள வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேற்படி அலுவல்களுக்காக ஆடிட்டரை தொடர்பு கொள்ள வேண்டிய செல் நம்பர் - 9443131888 மற்றும் 6374345046. தங்களுக்கு போன் கால் கிடைக்காவிட்டாலோ அல்லது போன் எடுக்கப்படா விட்டாலோ ஒரு SMS அல்லது வாட்ஸ்அப் மெஸேஜ் அனுப்பினால் போதுமானது அல்லது Missed Call கொடுத்தாலே தாங்கள் உடனே அழைக்கப்படுவீர்கள். தற்போதைய அலுவலர் நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே. ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.

4. மேற்படி முழு COVID-19 முழு அடைப்பினாலும் மற்றும் ஆடிட்டர் அலுவலகப் பணிகள் முறையாகவும் குறுகிய காலத்திலும் மற்றும் தவணை தேதிக்குள்ளாகவும் முடிப்பதற்காகவே இந்த முறை தற்காலிகமாக அமல் படுத்தப்பட்டுள்ளது.

5. மேற்கண்ட ஆவணங்கள், தகவல்கள் மற்றும் இதர செய்திகள் 01.04.2019ல் தொடங்கி 31.03.2020ல் முடியும் கணக்கு வருடத்திற்கானது. இந்த கணக்கு வருடத்திற்கான வருமான வரி சட்ட மாற்றங்கள், வரி விகிதங்கள், வரி பிடித்தம் செய்ய வேண்டிய வரித் தொகைகள் மற்றும் இதர செய்திகள்

தனியாக தங்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவும் வாட்ஸ்அப் மூலமாகவும் ஒரு வாரத்திற்குள் வந்து சேரும். மேற்கண்ட வருடம் இல்லாமல் பாக்கி உள்ள இதர வருட கணக்குகளுக்கும் இந்த முறையை தயவு செய்து பின்பற்றவும்.

6. Digital Signature Certificate பெறுவதற்கும் ஆடிட்டரையே நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

7. ஆடிட்டரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் செல் நம்பர்கள் பின்வருமாறு :
   a. Cell No – 9443131888
   b. Whatsup No – 6374345046
   c. email : infotaxx@gmail.com<br>dk@infotaxx.com

8. மேலே விவரிக்கப்பட்ட அலுவலக முறைகள் தற்காலிகமானதே. மேலும் ஆடிட்டர் அலுவலக மேனேஜர்கள் வீட்டில் இருந்தே அலுவல்களை செய்வதால் இந்த முறையை அறிமுகப்படுத்தி உள்ளோம். COVID-19 முழு அடைப்பு முடிந்த உடன் மேற்கண்ட விலாசத்தில் அலுவலகம் வழக்கம் போல இயங்கும். அதுப்பற்றி தங்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படும்.

9. தயவு செய்து லெட்டர்கள், தபால்கள் மற்றும் இதர மேலே குறிப்பிட்ட எந்த ஆவணங்களையும் ஆடிட்டர் குடியிருப்பு விலாசத்திற்கோ அல்லது ஆடிட்டர் மேனேஜர்கள் குடியிருப்பு விலாசத்திற்கோ தயவு செய்து அனுப்ப வேண்டாம். (Form-27A தவிர. இந்த பாரம் அனுப்ப வேண்டிய முகவரி e-TDS கட்சிகாரர்களுக்கு தனியாக தெரியப்படுத்தப்பட்டுவிட்டது).

10. மேற்கண்ட தற்காலிகமான புதிய முறைகள் சிறிது கடினமாகவும் அதிக நேரம் எடுத்துக் கொள்பவையாகவும் இருப்பினும் தயவு செய்து இந்த முறைமைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

DURAISAMY KANNUSAMI

Digitally signed by DURAISAMY KANNUSAMI
Date: 2020.05.09 10:21:22 +05'30'

**து.கண்ணுசாமி**
பட்டயக் கணக்காளர்

குறிப்பு : இந்த சுற்றறிக்கை ஆடிட்டரின் மின்னனு கையொப்பத்துடன் தங்களுக்கு அனுப்பப்படுகிறது.